**செ.வெ.எண்-27** **நாள்-12.10.2018**

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு / உவர்நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தப்படவுள்ளது.

**புதிய மீன்பண்ணைக் குளங்கள் / குட்டைகள் அமைத்தல் திட்டத்தின்கீழ்** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பு குளம் அமைத்திட ஆகும் செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்தில் 40% (விழுக்காடு) அதிகபட்சமாக ரூ.2.80 இலட்சம் மானியத் தொகை வழங்கப்படும்.

**ஏற்கனவே உள்ள மீன்வளர்ப்பு குளங்கள் / தொட்டிகளை் சீரமைத்தல் / புதுப்பித்தல் திட்டத்தின்கீழ்** ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.3.50/- இலட்சத்தில் 40% மானியம் ரூ.1.40 இலட்சம் வழங்கப்படும்

**நன்னீர் மீன்வளர்ப்பு இடுபொருள் செலவினம்** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு இடுபொருட்களுக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.1.50 இலட்சத்தில் 40% (விழுக்காடு) மானியம் ரூ.0.60 இலட்சம் வழங்கப்படும்.

பயனாளிகள் முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ள விவசாயிகள் / மீன்வளர்ப்போர் ஒரு மாதத்திற்குக்குள் அரியலூர், மாவட்ட மீன்துறை உதவி இயக்கநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு அரியலூர், மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (அறை எண்:234, இரண்டாவது மேல் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர்-621 704) அலுவலகத்தினை, நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**